[illegible] as a News Paper (in Sri Lanka) பக்கங்கள் 04 விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM People's Daily மக்கள் தினசரி

நாதம் 02 ஏப்ரல் ( 29 - 04 - 1991 ) திங்கட்கிழமை ஓசை 70

## எட்டுப் பைந் இரத்தம் வெளியில் வீசப்பட்டது

(யாழ்ப்பாணம்)

திடீரென ஏற்பட்ட எரிபொருள் தட்டுப்பாட்டைத் தொடர்ந்து யாழ்.வைத்தியசாலை இரத்தவங்கியில்மின்சாரம் இன்மையால் குளிரூட்டியில் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த எட்டுப் பைந் இரத்தம் பழுதடைந்ததால் வெளியே ஊற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை நேற்று முன்தினமிரவும் காயமடைந்துவந்த நோயாளர்கள் பல (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவில் 12 மணிநேர மோதலில்

# 25 ராணுவர் பலி; 50 படுகாயம்

# 17 புலிகள் வீரமரணம்

## ஆயுதங்கள், சடலங்கள் புலிகளால் மீட்பு

(ஆனையிறவு)

ஆனையிறவு முகாமில் இருந்து தெற்குநோக்கி முன்னேறமுயன்ற இராணுவத்தினருக்கு எதிராக புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஒரு அதிகாரி உட்பட இருபத்தைந்திற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஐம்பதிற்கு மேற்பட்ட இராணுவத்தினர் படுகாயம் அடைந்தனர். இராணுவத்தினரின் சிதைந்த சடலங்கள் ஆறும் ஆயுதங்களும் புலிகளால் கைபபற்றப்பட்டன. இம்மோதலில் பதினேழு விடுதலைப்புலிகள் வீரமரணமடைந்தனர்.

நேற்று முன்தினம் காலை பரந்தன், ஆனையிறவு சந்தை, தட்டுவான் கொட்டி ஆகிய பகுதிகளை நோக்கி ஆனையிறவு முகாமில் இருந்து இராணுவத்தினர் முன்னேற எத்தனித்தவேளை விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் கடும்மோதல் மூண்டது. இந்த மோதலின் போது இராணுவத்தினருக்குத் துணையாக மூன்று குண்டு வீச்சு விமானங்களும், ஒரு அவ்ரோ விமானமும், மூன்று ஹெலிகொப்டர்களும் தாக்குதலை மேற்கொண்டன.

இந்த மோதல் அதிகாலை 5.30 மணியில் இருந்து மாலை 5-00 மணிவரையிலும் நீடித்தது.

இந்த மோதலை ஊர்ஜிதப்படுத்திய சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் ஒரு அதிகாரி உட்பட இருபத்திமூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், நாற்பத்தியாறுபேர் படுகாயம் அடைந்ததாகவும் தெரிவித்தது.

## நேற்றும் விமானக்குண்டுவீச்சு!

ஆனையிறவு இராணுவமுகாமைச் சுற்றியுள்ள பகுதிகளில் நேற்றுக்காலை 7-30 மணி தொடக்கம் மாலைவரையும் மூன்று குண்டு வீச்சு விமானங்கள் மூன்று ஹெலிகொப்ரர்கள் ஒரு அவ்ரோ விமானம் ஆகியன விமானத்தாக்குதல்களை நடாத்திய வண்ணமிருந்தன.

இதே சமயம் ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து இப்பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதலும் துப்பாக்கிப்பிரயோகமும் மேற்கொள்ளப்பட்ட வண்ணமிருந்தன.

## 17 புலிகள் வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு முகாமைச் சேர்ந்தசிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் நேற்றுமுன்தினம் வீரமரணம் அடைந்த போராளிகளின் விபரம் வருமாறு:

- ★ போல் (மு. உதயகுமார், பளை)
- ★ திகன் (ஆ. பரமராசா, முறிகண்டி)
- ★ பீற்றர் (கு மோகன்ராஜ், துணுக்காய்)
- ★ கிங்ஸ்லி (செ. பாஸ்கரன், இரணைமடு)
- ★ புவி (சிவயோகநாதன், தென்னியங்குளம், துணுக்காய்)
- ★ கருணா கா. சந்திரகுமார், பரந்தன்)
- ★ தியாகு (செ. அரிச்சந்திரன், ஸகந்தபுரம்)
- ★ றொசான் (சேகர், கிளிநொச்சி)
- ★ கிருபா
- ★ சுருளி
- ★ வேதா (கண்டாவளை)
- ★ இராமதாஸ் (முறிகண்டி)
- ★ எல்பேட் (கனகசுந்தரம், உருத்திரபுரம்)
- ★ முகிலன் (இ குருநாகன், மாங்குளம்) ஆகியோர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(பரந்தன்)

ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடன் கடந்த சனியன்று இடம்பெற்றமோதலின்போது விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

- ★ ஏ. கே. எல். எம். ஜி.-01 அதற்கான ரம் மகசின்-01
- ★ ரி. 81 ரக துப்பாக்கி- 01
- ★ ரி. 56 ரக துப்பாக்கி-01
- ★ 203 பிஸ்ரல்-01
- ★ ஜே. ஆர். கைக்குண்டு-04
- ★ ஐ. எம். ரவைகள்-1450
- ★ ஏ.கே,எல்.எம் ஜி. லிங்-125
- ★ 60 எம். எம். மோட்டார் ஸ்ராண்ட்-01

## திருமலையில் கடற்படை தொடர்அணிமீது தாக்குதல்

(திருக்கோணமலை)

திருக்கோணமலையில் இருந்து கடவான் கடற்படை முகாமுக்கு வாகனங்கள் சகிதம் சென்று திரும்பிய சிறிலங்கா கடற்படையினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ட்றக் வண்டியொன்று முற்றாகச் சேதமடைந்துள்ளது.

நேற்றையதினம் காலை ஏழு ஐம்பது மணியளவில் திருமலையிலிருந்து கடவான் கடற்படை முகாமுக்கு 34 வாகனங்களுடன் கடற்படை (4ஆம் பக்கம் பார்க்க)

## கிளைமோர் தாக்குதல்

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள பத்தாம்கட்டை இராணுவ முகாமிலிருந்து வில்கம்விகாரை முகாமிற்குச் சிறிலங்கா இராணுவத்தினர் செல்லும்போது இராணுவத்தினர் மீது விடுதலைப்புலி (4ஆம் பக்கம் பார்க்க)

## இடம் பெயர்ந்தோருக்கான நிவாரண நடவடிக்கைகள்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை, வேலணையிலிருந்து இடம் பெயர்ந்து முகாமகளிலுள்ள மக்களுக்கு அரச சார்பற்ற மனிதநேய ஸ்தாபனங்களினால் இரண்டு நாட்களுக்கு சமைத்த உணவு வழங்கப்படுகிறது. தொடர்ந்தாற்போல் இதற்கு மேலதிகமாக அரசாங்க அதிபரினாலும் இரண்டு நாட்களுக்குத் சமைத்த உணவு வழங்கப்படும்.

மேலும் இடம் பெயர்ந்த தீவக மக்களின் பராமரிப்புப் பணிகளை ஒருமுகப்படுத்தி வரும் தமிழர் புனர்வாழ்வுக் (4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். வைத்தியசாலையில் மருந்து, எரிபொருள் திடீர்த் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தியசாலையில் திடீர் எரிபொருள் மற்றும் மருந்துப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதேவேளை தொடர்ச்சியான ஊரடங்குச் சட்டத்தால்வைத்தியசாலைக்கென கொண்டுவரப்பட்ட எரிபொருள் மற்றும் மருந்துப் பொருள்களை பருத்தித்துறை களஞ்சியத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்குகொண்டுவரமுடியாத நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள இந்த எரிபொருள் தட்டுபாட்டைத் தொடர்ந்து வைத்தியசாலை நிர்வாகம் பொதுஸ்தாபனம் ஒன்றிடம் உடனடியாக எரிபொருள் உதவி செய்யும்படி கேட்டுள்ளது. இதேவேளை இரண்டு கொள்கலன் எரிபொருள்களை பொதுஸ்தாபனம் ஒன்று நேற்று முன்தினம் வழங்கிய போதிலும் அந்த எரிபொருள் போதாது எனவும் வைத்தியசாலையில்கூறப்பட்டது.(லோ

## இந்திய மீனவர் கொலை; விசாரணை செய்ய பணிப்பு

(கொழும்பு)

இந்திய மீனவர்கள் மூவர் இலங்கை கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டது சம்பந்தமாக இந்தியா தெரிவித்த புகாரை விசாரணை செய்யுமாறு இலங்கை வெளிநாட்டமைச்சு உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்திய தூதுவர் என். என். ஜா மீனவர்கள் கொல்லப்பட்டது தொடர்பான இந்தியாவின் கவலையை பதில் வெளிநாட்டமைச்சர் ஜோன் அமரதுங்காவிடம் தெரிவித்திருந்தார்.

## வேலை நிறுத்தம் செய்த 30,000 பேருக்கு தொழில்

(கொழும்பு)

1980 ஆண்டு யூலை மாதம் வேலை நிறுத்தம் செய்த 30,000 அரசாங்க ஊழியர்களுக்கு மீண்டும் வேலை வழங்கப்படும் என பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது. இவ் ஊழியர்களுக்கு விதிக்கப்பட்ட வேலை நீக்க உத்தரவு நீக்கப்பட்டுள்ளது என்றும், இவர்களை மீண்டும் வேலையில் சேர்த்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள்எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொது நிர்வாக அமைச்சு தெரிவித்தது.

## நூற்றாண்டு நிறைவு தினம்

இன்று பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் நூற்றாண்டு நிறைவு தினமாகும். இதனையொட்டி விசேட கட்டுரை ஒன்று பக்கம் 3 இல் வெளியாகியுள்ளது.

வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

இயற்கை வழியே சுகவாழ்வுக்கு ஏற்றம் தரும் இயற்கை வளம்கொண்டு தயாரித்த ஒலிவ் ஸ்நானப்பவுடர் எண்ணெய்க் குளியலுக்குச் சிறந்தது சிரசு, கண், உடலுக்கே குளிர்ச்சி தருகிறது இதுவும் ஒரு மில்க்வைற் உற்பத்தி பக்கெற் ஒன்று ரூ 1.50 மட்டுமே. (B/2412)

### தேவை

காய்ந்த எலுமிச்சம் கோது தேவை. மில்க்வைற் யாழ்ப்பாணம். (B/2428)

## UNIVERSITY OF JAFFNA.

Applications will be received by me for the following post from suitable candidates upto 1991-05-08.

### Temporary Demonstrator in Community Medicine

Note: If there are no suitable applications with MBBS Degree, Applications from A. M. O's will be considered.

Salary scale
Temporary Demonstrator with MBBS Degree
— Rs. 3,250/-
Temporary Demonstrator, A. M. O's
— Rs. 2,300/-

Applications should made on the forms available from the office of the Senior Assistant Registrar / Establishments of this University.

Request for application forms should be accompanied by a self addressed stamped envelope of 23x10 c. m. in size.

Applications from Government Departments State Corporations and Statutory Bodies should apply through the Heads of such Institutions.

–Registrar

University of Jaffna,
Thirunelvely,
Jaffna.
1991. 04. 25 (B. 2435)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

1. உடலமைப்பியல் பேராசிரியர்.
2. நோயியல் பேராசிரியர்.
3. மருத்துவப் பேராசிரியர்.
4. உளநோயியல் பேராசிரியர்.
5. குழந்தை மருத்துவப் பேராசிரியர்.
6. அங்கக் கோணல் அறுவை மருத்துவ அறக்கொடைத் தவிசு.
7. கழலையியலில் அறக் கொடைத் தவிசு
8. உடற்றொழிலியல் / சமூகமருததுவம் / நோயியல் / சட்டமருத்துவம் / மருத்துவம் / உளநோயியல் / மகப்பேற்றியலும் மாதர் நோயியலும் / அறுவை மருத்துவம் / குழந்தை மருத்துவம் / உடலமைப்பியல் / மருந்தியல் / நுண்ணுயிரியல் விரிவுரையாளர் / சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் ii.
9. உடற்றொழிலியல் / சமூக மருத்துவம் / நோயியல் / சட்டமருத்துவம் / மருத்துவம் / உளநோயியல் / மகப்பேற்றியலும் மாதர்நோயியலும் / அறுவை மருத்துவம் / குழந்தை மருத்துவம் / உடலமைப்பியல் / மருந்தியல் / நுண்ணுயிரியலில் தற்காலிக விரிவுரையாளர்.
10 கிளினிக்கல் மனோ தத்துவ நிபுணர்.

சம்பள அளவுத்திட்டம்.
பேராசிரியர் தரம் ii
ரூபா 12,200 - 6x300 - 14,000/- மாதமொன்றுக்கு.
சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் ii
ரூபா 8,000 - 5 x 250 9,250/- மாதமொன்றுக்கு
விரிவுரையாளர் (மருத்துவம்)
ரூபா 4500 - 10 x 200 - 6500/- மாதமொன்றுக்கு. (மருத்துவ பட்டத்தைச் சேர்ந்த விரிவுரையாளர் ஒருவர் முதல் நியமனத்தின் போது மேற்குறித்த சம்பள அளவுத்திட்டத்தில் இரண்டு படிகள் அதிகமாக உள்ள சம்பளத்தில் அதாவது 4900/- ரூபா சம்பளத்தில் வைக்கப்படுதல் வேண்டும்).
தற்காலிக சிரேஷ்ட விரிவுரையாளர்
ரூபா 8000/- (நிலையானது).
தரம் ii (மருத்துவம்) தற்காலிக விரிவுரையாளர்
ரூபா 4500/- (நிலையானது)
தரம் ii (மருத்துவம்) தற்காலிக உதவி விரிவுரையாளர்
தரம் ii
ரூபா 3900/- நிலையானது ஓராண்டுக்கு.
கிளினிக்கல் மனோ தத்துவ நிபுணர்
ரூபா 3900/- நிலையானது) ஓராண்டிற்கு.
(ஓராண்டு திருப்திகரமான சேவையை நிறைவு செய்த பின்னர் துணை வேந்தர் ரூபா 4500 - 10x290 - 6500/- சம்பள அளவுத் திட்டத்தில் 4500/- சம்பளப்படியில் வைப்பார்.)

பேராசிரியர்களுக்கும் அறக்கொடைத் தவிசுகளுக்கும் விண்ணப்ப முடிவு தேதி 1991-07-12 ஆகும். ஏனையோருக்கு முடிவுத்தேதி 1991-06-03 ஆகும்.

விண்ணப்பங்கள் இப்பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெறக் கூடிய படிவங்களில் செய்யப்படல் வேண்டும். பேராசிரியர் பதவிக்கும், அறக்கொடைக் தவிசுப் பதவிக்கும் விண்ணப்பப் படிவத்திற்கான வேண்டுகோளுடன் 23x10 ச.மீட்டர் அளவுடைய. சுயமுகவரியிட்டு இரண்டு ரூபா முத்திரையொட்டப் பெற்ற கடித உறையும் ஏனைய பதவிகளுக்கு 13x10 ச. மீட்டர் அளவுடைய சுயமுகவரியிட்டு, முத்திரையொட்டப் பெற்ற கடித உறையும், இணைக்கப்படல் வேண்டும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் என்பனவற்றிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர், தனித்தனியாக விண்ணப்பங்கள், அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்திற்கொண்டு சம்பள அளவுத் திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

குறிப்பு:- பேராசிரியர் அறக்கொடைத் தவிசு ஆகிய பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் கவனிக்கப்படும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

1991-04-12 பதிவாளர்

## மண்ணெண்ணெய்

நகருள், நகர் சார்ந்த பிரதேசங்களிலும் க.பொ.த உயர்தரப் பரீட்சை எழுதிக்கொண்டிருக்கும் மாணவ, மாணவிகளின் நலன் கருதி எமது விற்பனை நிலையத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நிழல் நிர்வாகத்தினரின் அனுசரணையுடன் போத்தல் 32 ரூபா வீதம் மண்ணெண்ணெய் வழங்கப்படும்.

★ பரீட்சை அனுமதி அட்டையைக் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

★ ஒரு அட்டைக்கு ஆகக் கூடியது 4 போத்தல் வழங்கப்படும்.

★ இன்று பிற்பகல் (29 . 04 . 91) 3. 00 மணிக்கு வழங்கப்படும்.

### "விடிவெள்ளி"

கஸ்தூரியார் வீதிச் சந்தி,
யாழ்ப்பாணம்.
(B - 2438)

### பங்கு கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

வட தமிழீழத்திலுள்ள சிகை அலங்கரிப்பு தொழில் புரியும் அனைவரும் எதிர்வரும் புதன் கிழமை இணுவில் மருதனாமடச்சந்தியில் இருந்து காலை 9 00மணிக்கு ஆரம்பமாகவுள்ள மேதின ஊர்வலத்தில் பங்கு கொள்ளுமாறு வட ஈழ சிகை அலங்கரிப்பாளர் சங்கம் கேட்டுள்ளது.

## 43ஆம் நாள் நினைவஞ்சலி

### லெப்டினன்ட் யுறோம்

(மா. அந்தோனி தாஸ்)

சிலாவத்துறை முகாம தாக்குதலில வீரமரணம்

இன்று காலை 6 00மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் நடைபெறும் ஆராதனையில் கலந்துகொள்ளும்படி நண்பர்கள், உறவினர்களை அழைக்கின்றோம்.

16/4, மத்தியூஸ் றோட், –குடும்பத்தினர்
யாழ்ப்பாணம். (B-2441)

## 31வதுநாள் நினைவஞ்சலி

வானம் மலர்ந்திட்டாயோ...

மண்ணில்
20
11
1972



விண்ணில்
30
03
1991

### வீரவேங்கை ரவி

(சுப்பிரமணியம் ஜெயநேசன்)
(தயாளன்)

ஆசையில் வரம்பு கட்டி
அறிவுடன் அன்பு நீரைப்
பாசனம் செய்து பந்த-
பாசத்தை வளர்த்த செல்வா!
நேசனே!! நமது நெஞ்சம்
நிரம்பிடும் நினைவே!!! வையம்
வாசனை வீச வானம்
புகுந்து நீ மலர்ந்திட்டாயோ...

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்;
விநாயகர் வீதி, அம்மா, அண்ணாமார்,
முள்ளியவளை. அக்கா, மற்றும் உறவினர்
(B/2411)

## நினைவு கூருகின்றோம்...

### 1991 - 04 - 29

1986 ஆம் ஆண்டு இதேநாளில் தேசவிரோத சக்திகளின் துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்த

**கப்டன் லிங்கம்**

(சிங்காரவேல் செல்வகுமார் - வல்வெட்டித்துறை)

1988 ஆம் ஆண்டு பரப்புக்கடந்தானில் இந்தியப் படையினரின் முற்றுகையின் போது வீரமரணமடைந்த

**லெப். ஜீவன்** (மதியழகன் - திருக்கோணமலை)

ஆகியோரை
இந்நாளில் நினைவு கூருகின்றோம்

நாளை தமிழ்
ஈழம் பிறக்கும்
மாவீரனே உன்
கல்லறை பிளக்கும்
ஈழமண் ஆனந்த
கண்ணீர் வடிக்கும் — அதில்
வீரனே உன்
விதை முளைக்கும் — இதை
எண்ணி நகைத்தவர்
இதயம் பிளக்கும்
இனியும் அடிமைகள்
இல்லையென ஈழமண்
முரசு முழங்கும் — இது
ஆயிரம் ஆயிரம்
ஆண்டுகள் ஒலிக்கும்
மாண்ட மாவீரரே — உங்கள்
கனவு பலிக்கும்
எதிர் சந்ததிகள்
கண்ணீரைத் துடைக்கும்!

(சி. வடிவு எழுதிய 'கனவு பலிக்கும்' என்ற கவிதை)

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி
(B/ 2340)

❋ சிந்தனைக்கு ❋

உண்மைகள் அனைத்தும்
எடுத்து உரைப்பதற்கில்லை

— ஜோர்ஜ் ஹெர்பெட்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 29-04-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண்: 05


# நீங்கள் நிருபித்தாலும் நாம் ஏற்க மாட்டோம்

''விடுதலைப் புலிகளின் அழைப்பை ஏற்று மேதின விழாவில் பங்கு கொள்ள நான் யாழ்ப்பாணம் போகப் போவதில்லை'' என சிறிலங்காவிற்கான இந்தியத் தூதுவர் என். என். ஜா தெரிவித்துள்ளார்.

அதேவேளை கடந்த வாரம் பத்திரிகையாளர்களுக்குப் பேட்டி அளித்த இந்தியத் தூதுவர் விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பதை தேர்தல் மூலம் வலியுறுத்த வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பதை தமிழ் மக்கள் பல தடவை சிறிலங்காவிற்கும், இந்தியாவிற்கும் உணர்த்தியுள்ளார்கள். அதேபோன்று மேதினத்தின மூலம் மீண்டும் ஒரு தடவை வலியுறுத்த மக்களும், விடுதலைப் புலிகளும் தயாராக இருக்கின்றார்கள். ஆனால் அதைக் கண்டு கொள்ள அவர்கள் தயாராகவில்லை.

இந்தியா, இலங்கைப் பிரச்சினையில் நேரடியாகத் தலையிட்ட 1987 ஆம் ஆண்டு முதல் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் என்பதை தமக்கு உணர்த்த வேண்டும் எனக் கோரி வந்தனர். ஆனால், மக்களும, விடுதலைப் புலிகளும் உணர்தத முறபட்ட சமயங்களில் இந்தியா உணர முன்வரவில்லை / விரும்பவில்லை. 1987 இல் தியாகி திலீடன் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தபோது தமிழ் மக்களின் உணர்வலைகளையும், விடுதலைப் புலிகள் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிககையையும் நேரடியாக வந்து பார்க்குமாறு அன்றைய சிறிலங்காவிற்கான இந்தியத் தூதுவர் டிக்ஷிற்றிடம் புலிகள் வேண்டுகோள் விடுத்தனர். ஆனால், அதை இந்தியத் தூதுவர் ஏற்றுக் கொள்ளவில்லை.

அதன் பின்னர் இரண்டு வருடத்திற்கு மேலாக தமிழ் குழுக்களின் உதவியுடன் ஓர் இலட்சத்திற்கு மேற்பட்ட இராணுவத்தினரைக் கொண்டு விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை இந்தியா நடத்தியது. அதிலும் மக்கள் தாம் விடுதலைப் புலிகளின் பக்கம்தான் என்பதை இந்தியாவிற்கு தெளிவாக நிரூபித்தனர். அதனையும் இந்தியா புரிந்து கொள்ளவில்லை.

இன்றும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள்தான் எனபதையும், தமிழ் மக்கள் தமது உரிமைப் போராட்டத்தில் எவ்வளவு உறுதியாக உள்ளனர் என்பதையும் நிரூபிக்கின்றோம், வாருங்கள் மே தினத்திற்கு என்றால் அதனைக் கண்டு கொள்ள இந்தியா தயாராகவில்லை.

யாழ்ப்பாணத்தில் நடைபெறப் போகும் மே தினக் கூட்டமும், பேரணியும் காலிமுகத்திடலில் இந்தியத் திரைப்பட நட்சத்திரங்களையும் பின்னணிப் பாடகர்களையும் கூட்டிவந்து ஐக்கிய தேசியக் கட்சி நடத்தும் ஒரு வேளிக்கை விழாவல்ல. அடக்கபபடும் தமிழ் மக்களின் உரிமைக்கான குரல் ஓங்கி ஒலிக்கப் போகும் களமாகும்.

இந் நிலையில், தமிழ் மக்களின் உணர்வுகளையும், தமிழ் மக்களின் பிரதிநிதிகள் யார் என்பதையும் புரிநது கொள்ள மறுக்கும் இந்தியா / இந்தியத்தூதர் தேர்தல்மூலம்தான் நிரூபிக்க வேண்டும் என்பது அவர்களுடைய 'ஜனநாயக' விருப்பமல்ல. விதண்டா வாதத்தின் வெளிப்பாடு.

'ஜனநாயகம்' என்ற போர்வையில் இந்தியாவிலும் சிறிலங்காவிலும் நடந்த. நடக்கின்ற தேர்தல் சீர்கேடுகள் தமிழ் மக்களால் அறியப்படாதவையல்ல. இலங்கையின் வடக்கு, கிழக்கில் சிறிலங்கா நடத்திய மாவட்ட சபைத் தேர்தலும், இந்தியா நடத்திய மாகாண சபைத் தேர்தலும் இதற்குப் போதுமான சாட்சியங்களாகும்.

மொத்த பாராளுமன்ற ஆசனங்களில் பத்து சதவீதமும் இல்லாத உறுப்பினர்களைக் கொண்ட கட்சி —ஜனதா தள் எஸ்— ஆட்சி அமைப்பதற்கும், மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட பெரும்பான்மை ஆதரவு கொண்ட - தி. மு. க. - ஆட்சியைக் கலைப்பதற்கும் ''இந்திய ஜனநாயகம்'' இடமளிக்கின்றது. இந்த நிலையில் மக்களின் பிரதிநிதிகள் நீங்களா தேர்தல் மூலம் நிரூபிப்பீர்களா என இந்தியத் தூதுவர் கேட்பது வேடிக்கையாகவுள்ளது.

உதைபந்தாட்டக் களத்தில் நடுவரும் சேர்ந்து கோல் போடுவது போன்ற ஜனநாயகம் உடைய நாடு இந்தியா. உலகில் பெருந்தொகை மக்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளார்கள் என்பதால் இந்தியாவில் ஜனநாயகம் செழிக்கின்றது என்றால் அது மடைமை.

தூங்குபவனை எழுப்பலாம், தூங்குவதுபோல் பாசாங்கு செய்பவனை எழுப்ப முடியாது. இலங்கைத் தமிழர் விவகாரத்தில் இந்தியாவின் நிலையும் இதுதான். அதேவேளை இலங்கைத தமிழர் விவகாரத்தில் இந்தியா தூங்கனாலும், தூங்குவதாக பாசாங்கு செய்தாலும் இந்தியாவும் நட்டமடைய வேண்டிவரும் என்பதை இந்தியா புரிந்து கொள்ளுதல் நல்லது.

# பாவேந்தர் பாரதிதாசன்

தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு மறுமலர்சசி அவசியமாகும். இத்தகைய மறுமலர்ச்சி பாட்டுக்கொரு புலவர் பாரதியாராலேயே ஏற்பட்டது. பாரதியார் வாழ்ந்த காலததிலேயே பததாண்டுகள் அவருடன் பழகி இனிய தமிழ் மொழியில் புரட்சிப் பாக்களைப் பாடியவர் பாவேந்தர் பாரதிதாசனாவார். பாரதிதாசன் எழுபத்தொன்பதாண்டுகள் உயிர் வாழ்ந்தார். பதின்மூன்றாவது வயதில் பாடல் எழுதத் தொடங்கினார்.

ஆரம்ப காலத்தில் கவிதை என்பது கடின நடையுடையதாகத்தான் இருக்கவேண்டும் அப்படி இருந்தாற்றான பாட்டுத் திறன் அமைந்தது எனக் கருதப்பட்டது.

இக்கருத்துக்கு முற்றிலும் மாறுபட்டு பாரதியாரும், பாரதிதாசனும் பாடலகளைப் பாடினார்கள். வெல்லும் தமிழால் நெஞ்சை அள்ளும் பாக்களை உருவாக்குவதில் தனித்தன்மை கண்டவர் பாரதிதாசன்.

சுப்புரத்தின மென்று தாய் தந்தையர் தனக்குப் பெயரிட்டபோதும் தமிழ்மொழிமீது ஏற்பட்ட தணியாத தாகத்தால், அந்தத் தமிழுக்கு உயிர் ஊட்டிய, உணர்வூட்டிய உயர் புலவன் பாரதியின் பாசத்தால் கட்டுண்டு பாரதிதாசனாய் விளங்கினார்.

பாவேந்தர் பாரதிதாசன் ஒரு புரட்சிக் கவிஞன்; மறுமலர்ச்சிக் கவிஞன் என்று இன்று தமிழ் மக்களால் போற்றப்படுவதற்கு உதாரணமாக அவர் வாழ்ந்த காலத்தில் அவரது செயல்களும் அமைந்தன.

விடுதலை வீரர் வ. உ. சிதம்பரப்பிள்ளையின் விடுதலை ஆர்வத்தால் கவரப்பட்ட பாரதிதாசன், பாரதியார், வ. வே. சு. ஐயர், அரவிந்தர் போன்றோருக்குப் புகலிடம் அளித்தார். அன்றைய தலைவர்களுக்கு செலவுக்குப் பணம் கொடுத்தார். பாரதியாரின் இந்தியா ஏட்டை மறைமுகமாகப் பதிப்பித்துக் கொடுத்தார். இவற்றை எல்லாம்விட ஆஷ் கலெக்டரைச் சுட்ட துபபாக்கியை வழங்கியவரும் பாரதிதாசனே ஆவார்.

திருப்புவனையில் தமிழாசிரியராக இருக்கையில் பிரெஞ்சு அரசுக்கு எதிராகச் செயற்பட்டார் என்று குற்றஞ் சாட்டப்பட்டார். பாரதிதாசனுக்கு ஒன்றரை ஆண்டுகள் சிறைவாசம் தீர்த்த அரசு பின்னர் தண்டனையின் தவறுணர்ந்து அவரை விடுதலை செய்தது. ஆனால் இந்திய விடுதலைப் போராட்டத்தில் தன் பங்கைச் செலுத்த அவர் தவறவில்லை.

கவிஞரின் வீறுகொண்ட கருத்துக்கள் வேகங் கொண்ட நடை என்பவற்றால் தமிழ் மக்கள் புத்துயிர் பெற்றனர்.

''எங்கள் வாழ்வும், எஙகள் வளமும், மங்காத தமிழென்று சங்கே முழங்கு'' என்ற பாரதிதாசன் முழக்கம் தமிழக மக்கள் உள்ளங்களில் ஆழப் பதிந்தது. அவரது பாடல்களில் உணர்ச்சிக்குப் பஞ்சமில்லை எனலாம்.

''மங்கை ஒருத்தி தரும்
சுகமும்-எங்கள்
மாத்தமிழ்க் கீடில்லை என்
றுரைப்போம்''

என்று தமிழ் இளைஞரை வீறு கொள்ள வைத்தார் பாரதிதாசன்.

இனம், சனம், இனியன, அரியன், பெரியன என இந்த உலகில் எவற்றையெல்லாம் நாம் கருதுகிறோமோ அவற்றைவிட எல்லா வகையிலும் சிறந்ததாகத் தமிழ் ஒன்றையே போற்றி மகிழ்ந்து வாழ்ந்தவர் பாவேந்தர்.

தமிழ் மக்கள் பாவேந்தர் பாரதிதாசனைப் புரட்சிக் கவிஞரென்று போற்றி ஏற்றி வருகின்றார்கள் ஆனால் புரட்சிக் கவிதை என்றால் என்ன என்பதைப் புரிந்து வைத்திருக்கிறார்களா எனபது சந்தேகமே.

கவிஞரின் தமிழ்க் கவிதைகளில் கொட்டிக் குவித்த புதுமைக் கருத்துக்களை இரண்டு வகையாகப் பிரிககலாம.

ஒன்று தமிழ்த் தேசியம்; அடுதத்து சமுதாயத்தின் பல அம்சங்களிலும் புதுமை நாடிய ஓர் புரட்சி.



''பெண்களுக்கு கல்வி வேண்டும்; கல்வியைப் பேணுதற்கே! என்று முடிக்கிறார் கவிஞர்.

பெண்களுக்குப் பேச்சுரிமை வேண்டும்; ஆட்சி உரிமை வேண்டும் என்று அடித்துச் சொல்கிறார் கவிஞர்.

மகளிரெலாம் அரசியலைக்
கைப்பற்றி ஆண்டால்
மாநிலததில் போரில்லை
சாக்காடும் இலலை -

பெண்களிடம் ஆட்சி உரிமை தானாக வராது அவர்கள் தான் வீறுகொண்டெழுந்து கைப்பற்றிக்கொள்ளவேண்டும் என்கிறார்

''தமிழை என்னுயிர் என்பேன்'' என்றும் தமிழுக்கும் அமுதென்று பேர், அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எஙகள் உயிருக்கு நேர்'' என்றும் உயிருக்கும் மொழிக்கும் உள்ள உறவைத் தெளிவாக்குகின்றார்.

சாதி, சமய, வர்க்க பேதங்களால் பிளவுபட்டுக் கிடக்கும் தமிழ் மக்களை தமிழ் மக்களாகவே காண்கிறார். ஒன்றுபட்ட தமிழ் சமுதாயத்தினால் தான் கருத்துப்புரட்சி, விடுதலை ஏற்படும் என்று நம்புகிறார்.

வெள்ளம் போல் தமிழர்
கூட்டம்
வீரங்கொள் கூட்டம்
அன்னார்
உள்ளத்தால் ஒருவரே மற்
றுடலினால் பலராய்க்
காண்பார்
கள்ளத்தால் நெருங்
கொணாதே
என வையம் கலங்கக்கண்டு
துள்ளும் நாள் எந்தநாள்?
உள்ளம்
சொக்கும் நாள்
எந்தநாளோ?

என்று பாடி ஆடிடும் கவிஞர் ''எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் இங்குளள தமிழர்கள்ஒன்றாதல்கண்டேல் என்றும் காலத்தின் குரலாகவும் விளங்குகின்றார்.

''தமிழரெல்லாம் ஒன்றுபடததகக நேரம். தமிழரிதை மறப்பாரேல் இனமே சாகும்'' என அவர் முழக்கம் தமிழர் வாழும நாடெங்கும் எதிரொலித்து நிற்கின்றது.

பட்டம், பதவிக்காக தமிழன் ஏங்கித் திரிவதையும, தன் இனம், தன் சனம் என்று எண்ணாது தான் வாழ்ந்தால் போதும் என வாழ்வதையும் சாடுகிறார் பாவேந்தர்

சலுகை போனால போகட்டும் - என்
அலுவல் போனால் போகட்டும்
தலைமுறை ஒருகோடி
கண்டஎன்
தமிழ விடுதலை ஆகட்டும்.

தேச விடுதலையின் போது உரிமை பற்றிச் சிந்திக்க வேண்டுமேயன்றி சலுகை பற்றியோ அலுவல் பற்றியோ சிந்திக்கக் கூடாதென்பதை வலியுறுத்துகின்றார்.

''செந்தமிழைத் தீர்ப்பாரைத்
தீர்த்தல் முதல் வேலை!
சிந்தட்டும் செங்குருதி ஆறு!
தமிழுக்கு நீசெய்யும
தொண்டு-நின்
பகைமீது பாய்ச்சிய குண்டு.

பாரதிதாசன் நூற்றாண்டு விழாவின் போது அவரது தீர்க்கதரிசனம் இன்று தமிழீழத்தில் நிதர்சனமாகி வருவது கண்டு அவர் ஆன்மா மெத்த மகிழும் என்பதில் ஐயமில்லை

பாரதிதாசனின் கவிதைகள் இன்று தமிழீழப்போராட்டத்திற்கு முற்றிலும் பொருந்துவனவாக இருக்கின்றன.

''இளந் தமிழா, வரிப்புலியே
பிற்றை நாளுக்
கணிசெய்யும் இலக்கியம்செய்
அறத்தைச் செய்! விடுதலை
கொள்
அழகு நாட்டில்!
பணிசெய்வாய்! தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும்
பழநாட்டானே!''

''பொங்கு தமிழர்க்கு இன்
னல் விளைத்தால்
சங்காரம் நிசமெனச் சங்கே
முழங்கு!''

ஈழத் தமிழ் மக்களுக்கு பாவேந்தர் பாரதிதாசன் பாடல்கள் உந்து சக்தியாக அமைவதாக.

— புத்தொளி

# மேதின ஏற்பாடு கூட்டங்கள்

மேதின ஏற்பாடுகள் சம்பந்தமாக கலந்துரையாடுவதற்கு யாழ். மாவட்டத்தில் உள்ள சகலகூட்டுறவு தொழிற் சங்க தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் மேதின சங்க ஏற்பாட்டாளர்களனை வரையும் இன்று பிற்பகல் மூன்றுமணிக்கு நல்லூர் பலநோக்கு கூட்டுறவு சங்க மண்டபத்திற்கு வருகைதருமாறு யாழ் மாவட்ட கூட்டுறவுப் பகுதியினர் கேட்டுள்ளனர்.

மேதினக் கொண்டாட்டங்களில் பெருந்தொகையானோர் ஒன்றுகூட இருப்பதனால் அவற்றுக்கான முதலுதவி, சாரணர் சேவையை திறம்படவழங்க ஆலோசனை செய்வதற்கான கூட்டம் ஒன்று இன்று பிற்பகல் நான்கு மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

சகல உதவி மாவட்ட ஆணையாளர்கள், சாரணர் தலைவர்கள், குருப்புத்தலைவர்கள், திரிசாரணர்கள் இக் கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு மாவட்ட ஆணையாளர் கேட்டுக் கொள்கிறார்.

# திறம்பட்ட சேவைக்காக உ.அ.அ.பிரிவுகளில்மாற்றம்

(கொழும்பு)

உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் திறம்படச் சேவை ஆற்றும் வகையில் மாற்றி அமைக்கப்படவுள்ளன. உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் எல்லைகளை நிர்ணயிக்க குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. இதேவேளை அரசாங்க நிர்வாக சேவையிலும் புதிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

# ஜூலையில் பட்டமளிப்புவிழா

யாழ் பல்கலைக்கழக பட்டதாரிகளுக்கான பட்டமளிப்பு வைபவம் எதிர்வரும் ஜூலை மாதம் ஆறாம் திகதி நடைபெற இருககிறது. (24)

மத்திய கிழக்குப் பேச்சுவார்த்தையில

# ஐ.நா, பலஸ்தீன விடுதலை இயக்கம் கலந்துகொள்ளக்கூடாது

**- இஸ்ரேலியப் பாதுகாப்பு அமைச்சர்**

(டெல் அவிவ்)

அரபு நாடுகளின் தலைவர்கள் கொடுக்கும் நெருக்குதலினால் தான அமெரிக்க - இஸ்ரேலியப் பேச்சுவார்த்தைகள் முற்றுப்பெறாமல் போயின என்று இஸ்ரேலியப் பாதுகாப்பு அமைச்சர் மோஷி ஆரென் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இஸ்ரேலிய வானொலியில் உரையாற்றிய அவர் அமெரிக்காவும், சோவியத் யூனியனும் பங்கேற்கும் எந்த ஒரு சமாதான மாநாட்டையும் இஸ்ரேல் ஏற்கும் என்றும் ஆனால் ஐ நா சபையும், பாலஸ்தீன விடுதலை இயக்கமும் அதில் இடம்பெறக் கூடாதென்றும் தெரிவித்தார்.

அதேவேளை மத்திய கிழக்கிற்கான சமாதான மாநாட்டை நடாத்தும் அமெரிக்காவின் யோசனையை இஸ்ரேல் பிரதமர் யிட்ஸாக் ஷாமிர் நேற்று நிராகரித்துள்ளார் மாநாட்டில் திணிக்கக்கூடிய தீர்மானங்களைக் கொண்டிருக்கக் கூடாதென்று இஸ்ரேல் வலியுறுத்தியுள்ளது. இஸ்ரேலுடன் நேரடிப் பேச்சுக்களை நடாத்துவதைத் தவிர்க்கும் அமெரிக்காவின் யோசனையை அரபு நாடுகள் ஆதரித்துள்ளமையினையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை சிரியா ஜனாதிபதி ஹபுசல் அசாத் மேற்காசியா பற்றிய அமெரிக்காவின் சமாதான முயற்சி தோல்வியடையுமானால் அதற்கு இஸ்ரேல் தான் பொறுப்பாகும் என குற்றஞ் சாட்டியுள்ளார்.

அமெரிக்கா தலைமையில் வளைகுடா யுத்தம் தொடங்கியமை இஸ்ரேலைப் பலப்படுத்துவதேயாகும் என்று லிபியத் தலைவர் கடாபி கூறியுள்ளார். அடுத்த இலக்கு தமது நாடாக இருக்கலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## அகதிகளை ஏற்றி வர அமெரிக்க ஹெலிகள்

(வாஷிங்டன்)

துருக்கியின் எல்லையில் தஞ்சம் அடைந்துள்ள குர்திஷ் இனமக்களை அமெரிக்க இராணுவ ஹெலிகொப்டர்கள் ஈராக்கின் வடபகுதியிலுள்ள சக்கோ நகருக்குள் அழைத்து வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கைகள் நான்கு தினங்களில் முடிவடைந்துவிடும் என்றும் 250 மக்கள் வீதம் ஒரு ஹெலிகொப்டருக்குள் ஏற்றி இப்பணியினை முடித்துவிடுவோம் என்றும அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

## திட்டமிட்டபடி பல்கலை. விஞ்ஞானபீட பரீட்சை

(யாழ்ப்பாணம்)

ஏற்கனவே திட்டமிட்டபடி விஞ்ஞான பீட அரையாண்டுப் பரீட்சைகள் இன்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறும். ஊரடங்குச் சட்டத்தை முன்னிட்டு எந்தப்பரீட்சையும் பின்போடப்படமாட்டாது என யாழ். பல்கலைக்கழக பதிவாளர் க. பரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மேலும் நாளை மறுதினம் காலை எட்டு மணிக்கு ஆரம்பமாகவிருக்கும் தொழில்வாளர் கல்வி வகுப்பில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் இன்று யாழ். பல்கலைக்கழகத்தில் பதிவுசெய்துகொள்ள வேண்டும். இக்கல்வி பயில இருக்கும் மாணவர்கள் பல்கலைக்கழக மாணவர்கள் போலவே பதிவு செய்துகொள்ள வேண்டும் எனவும் பல்கலைக்கழக அடையாள அட்டையையும் பெற்றுக் கொள்ளவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். (லோ)

## சமுகம் தர வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

வேலணை, ஊர்காவற்றுறை தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச்சங்க நிர்வாக உறுப்பினர்களையும், பணியாளர்களையும் இன்று திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு சமுகம் தரும்படி யாழ் மாவட்ட கூட்டுறவுப் பகுதியினர் கேட்டுள்ளனர்.

இடம்பெயர்ந்துள்ள அங்கத்தவர், பணியாளர்கள் தொடர்பாக கலந்தாலோசிக்கவே வரும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

## நேர்முகப் பரீட்சைக்கு செல்லாதோர்க்கு சந்தர்ப்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை அதிபர் சேவை தரம் (III) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு இதுவரை அப்பரீட்சைக்குச் செல்லாதவர்கள் மே ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரையுள்ள நாட்களில் கல்விச் சேவை ஆணைக்குழுவுடன் தொடர்பு கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது

மேற்குறிப்பிட்ட தினங்களில் கல்விச்சேவை ஆணைக்குழு உறப்பினர் க. ஜெயக்குமார் அவர்களுடன் தொடர்பு கொண்டு நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றலாமென இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கத்திற்கு மேற்படி ஆணைக்குழு அறிவித்துள்ளதாக த மகாசிவம் தெரிவித்துள்ளார்.

இந்த நேர்முகப்பரீட்சைக்கு செல்பவர்கள் புதன்கிழமை மாலை 5 மணிக்கு நல்லூரில் அமைந்துள்ள சங்கப்பணிமனையில் க சே. ஆகு உறுப்பினர் க. ஜெயக்குமார் அவர்களுக்கு பொதுச் செயலாளரின கடிதம் ஒன்றைப்பெற்றுச் செல்லுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## 17 புலிகள்

வீரபரணமடைந்தனர்.

அதேவேளை நேற்றுமுன்தின மோதலில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த

★ விசுவாசம் (செல்லத்துரை, சுபாஸ்கரன், வவுனிக்குளம், துணுக்காய்)

★ ஆனந்தன் (கிருஸ்ண ராஜா சந்திரன், திருவையாறு, கிளிநொச்சி, ஆகியோர் நேற்று வீரமரணம் அடைந்தனர்.

இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## திருமலையில்

யினர் சென்றுவிட்டு திரும்பி திருமலைக்கு வரும்போது மாலை 3-30 மணியளவில் விடுதலைப புலிகள் அவர்கள் மீது ஆர். பி. ஜி. ஷெல் தாக்குதலும், 60 எம். எம். மோட்டார் தாக்குதலும், துப்பாக்கிப்பிரயோகமும் மேற்கொண்டதாகத் தெரியவருகிறது.

இந்தத் தாக்குதல்களால் கடற்படையினர் வந்த ட்றக் வண்டியொன்று முற்றாகச் சேதமடைந்துள்ளதாகவும், அதில்வந்த கடற்படையினர் கொல்லப்பட்டும், படுகாயம் அடைந்துள்ளதாகவும் அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. சேதஎண்ணிக்கை விபரம் இதுவரை கிடைக்கவில்லை.

## எட்டுப்

ருக்கு இரத்தத் தட்டுப்பாடு ஏற்பட்டது. பொதுஸ்தாபனம் ஒன்று இதற்காகிய இரத்ததானம் செய்வதற்கென உடனடியாக இருநூறு பேரை அழைத்துவந்து இரத்ததானத்திற்காக விட்டபோதிலும் அவர்களில் பத்துப் பேரிடம் இருந்து மட்டுமே இரத்தம் எடுக்கப்பட்டது குளிரூட்டிகள் இல்லாது பாதுகாத்து வைக்கமுடியாது என்ற நிலை இருந்ததால் மீதி நூற்றுத் தொண்ணூறு பேர் திருப்பி விடப்பட்டனர் எனவும் கூறப்பட்டது. (லோ)

## கிளைமோர்

கள் கிளைமோர்த் தாக்குதல் மேற்கொண்டனர். இராணுவத் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால் சேத எண்ணிக்கை விபரம் கிடைக்கவில்லை.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்தில் உள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## கிராம சேவகர்கள் இன்று செயலகத்திற்கு அழைப்பு

தீவுப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களின் நிவாரண ஒழுங்குகளைச் சிறப்பாகச் செய்வதற்காக வேலணை, ஊர்காவற்றுறை கிராமசேவகர்கள் இன்று காலை 9 மணியளவில் யாழ். செயலகத்துக்குச் சமுகம் தருமாறு கேட்கப்படுகின்றார்கள். நல்லூர் உ. அ. அதிபர் பிரிவின் கிராம சேவகர்கள் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையிலும், யாழ். உ. அதிபர் பிரிவின் கிராமசேவகர்கள் யாழ். உதவி அதிபர் பணிமனையிலும் இன்று காலையில் சமுகம் தரும்படி கேட்கப்படுகின்றார்கள்.

இதே வேளை தீவுப் பகுதி மக்களின் நலன் கருதி வேலணை, ஊர்காவற்றுறை உ அ. அதிபர்களின் தொடர்பகம் யாழ். செயலகத்தில் இயங்கவுள்ளது.

## தற்காலிக கூ. சங்கங்கள் யாழ்.நகரிலும், நல்லூரிலும்

(யாழ்ப்பாணம்)

நல்லூரிலும் யாழ்ப்பாணத்திலும் இடம்பெயர்ந்த மக்களுக்கு உலர் உணவு வழங்குவதற்கென வேலணை, ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, நயினாதீவு ப நோ சங்கங்கள் தற்காலிகமாகத் திறக்கப்பட்டுள்ளன. 37 ஆம் கட்ட இலவச உலர்உணவு இடம்பெயர்ந்தவர்களுக்கு மேறபடி சங்கங்கள் மூலம் வழங்கப்படும்.

உலர் உணவு விநியோகத்திற்கான மேலதிக கையிருப்பு தீவு பகுதிப் ப நோ. கூ. சங்கங்களுக்கு வழங்கப்படவுள்ளது

## இணக்கமன்று உறுப்பினர் மே தினத்தில் பங்குபற்றவும்

(யாழ்ப்பாணம்)

சகல இணக்க மன்று உறுப்பினர்களும், உதவியாளர்களும் தத்தமது பகுதி பிரதேச அரசியற் பொறுப்பாளருடன் தொடர்பு கொண்டு, எதிர்வரும் மேதின ஊர்வலத்திலும். கூட்டத்திலும் கலந்து கொள்ளுமாறு தமிழீழ நிதி நிர்வாகப் பிரிவுப் பொறுப்பாளரின் செய்திக் குறிப்பு தெரிவிக்கின்றது.

அத்துடன் மேதினத்தன்று இணக்கமன்று, விசாரணைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளன என்றும் அச் செய்திக் குறிப்புத் தெரிவிக்கின்றது.

## கொழும்பில் வீதித்தடை; இராணுவம் சோதனை

(கொழும்பு)

கொழும்பில் நேற்று முன் தினம் பிரதான வீதிகளில் தடைகள் போடப்பட்டு சிறிலங்கா இராணுவத்தினர் சோதனையிட்டனர் என கொழும்புப் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

தனியார், இ. போ. ச. பஸ்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து வாகனங்களும் சோதனைக்குள்ளாக்கப்பட்டன.

சிறிலங்கா முப்படைகளின் ''ஒப்பரேஷன் கண்டோட்'' டின் ஒரு பகுதியாகவே இது நடைபெற்றதாகவும் அந்தப் பத்திரிகைகள் தெரிவித்தன.

## பூநகரியில் ஹெலித்தாக்கு

பூநகரிப்பகுதியில்நேற்றுபி ப. 1 50 மணி தொடக்கம் 2.15 மணிவரையும் ஹெலியில் இருந்து தொடர்ச்சியாகத் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலால் பூநகரி தெங்குபனம் பொருள் சங்க கட்டடம், வீடு, மினிபஸ் என்பன சிறு சேதமுற்றன.

## வீதித்தடை

(வவுனியா

வவுனியா-ஹொரவப்பொத்தான பிரதான வீதி, பொது மக்கள் செல்வதற்கு தடை செய்யப்பட்டு. இராணுவ நடமாட்டமுள்ள வீதியாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது

இவ்வீதியால் கடந்த ஜூன் மாதத்திற்கு முன்னர் திருக்கோணமலை - வவுனியாவிற்கான போக்குவரத்து மேற்கொள்ளப்பட்டு வந்தமை தெரிந்ததே. (தி)

## ஈராக் அதிபர் சதாம் இராஜினாமா செய்வார் ?

(பாக்தாத்)

ஈராக்கின் ஜனாதிபதி சதாம் ஹுசையின் தலைமையிலான இராணுவப்புரட்சி மன்றம் கலைக்கப்படும் என்று பிரதம மந்திரி ஹமாதி அறிவித்துள்ளார். பல கட்சி ஆட்சிமுறை, பத்திரிகைச் சுதந்திரம், தனியார் மயப்படுத்தல் ஆகியனவும் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. இதற்குமுன்னதாகச் சதாம் ஹுசையின் ராஜினாமா செய்வார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. முதல் தடவையாக ஈராக்கில் நேரடித் தேர்தல் நடைபெறவுள்ளதாகவும் ஈராக்கிய பிரதம மந்திரி ஹமாதி அறிவித்தார்.

நீர், மின்சார விநியோகம், தொலைபேசித் தொடர்பு ஆகியவற்றை முழுமையாகச் செயற்படுத்தவும நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நேற்று சதாம் ஹுசைனின் 54 ஆவது பிறந்த தினம் என்பதும் குறிப்பிடத்தககது.

## இராணுவ நடவடிக்கைகளில் ஜப்பான் ஈடுபடாது

ஜப்பானிய இராணுவத்தின் கடந்தகால நடவடிக்கைகள் மீண்டும தொடங்கப்படமாட்டாதெனஜப்பானியப் பிரதமர் கைபூ உலக நாடுகளுக்கு உறுதி அளித்துள்ளார். ஐந்து தென்காசிய நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்டு மலேசியாவிற்கு வந்துள்ள பிரதமர் கைபூ மேற்படி உறுதியை வழங்கினார்.

அவர் மேலும் பேசுகையில், தமது நாட்டின் கடந்தகால நடவடிக்கையின்போது ஆசிய நாடுகள் சொல்லொணாத் துயரமடைந்தமையினை ஏற்றுக் கொண்டார். வெளிநாடுகளில் இராணுவ ஒத்திகைகளில் ஜப்பான் இனி ஒருபோதும் ஈடுபடாது. இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஜப்பான் சில ஆசிய நாடுகளைக் கைப்பற்றிக் கொண்டது. அவற்றில் சில தற்போதும் ஜப்பான் மீதுபகைமை கொண்டுள்ளன எனவும் கைபூ குறிப்பிட்டார்.

## இடம் பெயர்ந்

கழகம், யாழ்நகரமக்கள், வர்த்தகர்கள், பொது ஸ்தாபனங்களிடமிருந்து உதவி கோரியுள்ளது. சமைத்த உணவுப்பார்சல்களை வழங்க விரும்புபவர்கள் யாழ்/கொட்டடி நமசிவாயம் வித்தியாசாலைக்கு அருகிலுள்ள தமிழர் புனர் வாழ்வுக் கழக காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர். அடுத்த இரண்டு தினங்களுக்கு சமைத்த உணவுப் பார்சல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

முகாம்களில் இல்லாதவர்கள் தங்கள் உலர் உணவு அட்டையுடன் தற்போது தாங்கள் தங்கியுள்ள பிரிவு கிராம சேவையாளருடன் தொடர்பு கொண்டு தங்கள் விபரங்களைப் பதியுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவர்களுக்கு 37 ஆம் கட்ட இலவச உணவு விநியோகம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முகாம்களில் உள்ளவர்களுக்கும் நான்கு நாட்கள் கழிந்தவுடன் மேற்படி உலர் உணவு நிவாரணம் வழங்கப்படும்.